www.padippakam.com



# சிங்களவர்களுக்குத் தலை வெட்டிய சிங்கை ஆரியன்

17

## காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை...

தொடர்கின்ற வரலாற்று மோசடிகளும் துரோகங்களும்

### வரலாற்றுத் தொடர்

கலிங்க மகானின் ஆட்சியின் பிற்காலத்தில் அதாவது கி.பி. 1236-ம் ஆண்டு பண்டித பராக்கிரமபாகு என்று அழைக்கப்படுகின்ற இரண்டாம் பராக்கிரமபாகு பொலநறுவையைக் கைப்பற்றி, மகானது ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தான். ஆனால் அவனால் சிங்கை நகரைக் கைப்பற்ற முடியவில்லை. சிங்கை நகரில் மகானுக்குப் பின் அவனது வாரிசான குலசேகர சிங்கை ஆரியன் கி.பி. 1240-ல் ஆட்சிக்கு வந்தான்.

இக் காலகட்டத்தில் (கி.பி. 1244-1247) இலங்கையில் அற்புதங்கள் செய்யும் அதிசய புத்தர் சிலையொன்று இருப்பதாகக் கேள்விப்பட்ட மலாய் தேசத்து மன்னன் சந்திரபானு என்பவன் அதைக் கைப்பற்றும் நோக்கத்துடன் படையெடுத்து வந்தான்.


அவனது படைகள் பொலநறுவையில் பண்டித பராக்கிரமபாகுவின் படைகளால் தோற்கடிக்கப்பட அவன், அக் காலத்தில் தமிழ்நாட்டில் சிறப்புடன் ஆட்சிசெய்த ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் சக்கரவர்த்தியிடம் தஞ்சம் புகுந்தான்.

அக் காலத்தில் சுந்தரபாண்டியனின் எதிரியான மூன்றாம் இராஜேந்திரசோழன் தன்னுடைய சோழ அரசின் எல்லைகளை விஸ்தரிக்கும் நோக்கில் கி.பி. 1253-ம் ஆண்டளவில் குடா நாட்டுக்குப் படையெடுத்து வந்து குலசேகரசிங்கையாரியனை வெற்றிகொண்டு அவனிடம் திறை பெற்றுக் கொண்டு தன்னுடைய சோழப் பேரரசுக்கு சிற்றரசாக இருக்கும்படி செய்ததாக அவனது சாசனத்தின் மூலம் அறிய முடிகிறது. கி.பி. 1253-ல் பொறிக்கப்பட்ட அச் சாசனத்தில் வட இலங்கையில் இருக்கும் 'வீர ராட்சதர்களை' அவன் வெற்றி கொண்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் படையெடுப்பால் கோபங்கொண்ட சுந்தரபாண்டியன் சிங்கை நகரைக் கைப்பற்றி சோழர் ஆதிக்கத்தை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கத்துடனும் தன்னிடம் தஞ்சம் பெற்ற மலாய் மன்னன் சந்திரபானுவுக்கு உதவி செய்யும் நோக்கத்துடனும் கி.பி. 1256-ம் ஆண்டு இலங்கைக்கு படையெடுத்து வந்து சிங்கைநகர் அரசன் குலசேகரனை வெற்றிகொண்டு, சிறைப் பிடித்தபின் பொலநறுவைக்குச் சென்று பராக்கிரமபாகுவையும் வென்று அவனது தேர், பொருள், முடி, சிம்மாசனம், ஆபரணங்கள் அனைத்தையும் கைப்பற்றிச் சென்றான். சந்திரபானு தேடவந்த அதிசய புத்தர் சிலை என்னாயிற்று என்பது தெரியவில்லை. சுந்தரபாண்டியனது இந்த வெற்றி அவனது சிதம்பரம் சாசனத்தில் குறிக்கப்பட்டுள்ளது. ஆனால் அக்காலத்து சிங்கள அரசர்களது வரலாற்றைச் சொல்லும் சூளவம்சத்தில் இது தொடர்பான எந்தக் குறிப்பும் இல்லை.

சுந்தரபாண்டியனின் சிங்கை நகர் பொலநறுவை வெற்றிக்குப் பின் அந்த வெற்றிகளில் நெருங்கிய தொடர்பு கொண்டவனாகிய ஜடாவர்மன் வீரபாண்டியன் இலங்கையை பாண்டிய இராட்சியத்தின் ஒரு அங்கமாகப் பரிபாலிக்கும் பொருட்டு பூநகரிக்கு அண்மையில் வந்திறங்கி இலங்கை நகரில் தனது அதிகாரத்தை நிலை நிறுத்திய பின், அங்கிருந்து திருகோணமலைக்குச் சென்று அங்கே தன் (பாண்டிய அரசின்) மீன் இலட்சணையையும் பொறித்து, மீன் கொடியை உயர்த்தி, பொலநறுவை அரசன் பராக்கிரமபாகுவிடமும் திறை பெற்றுக் கொண்டான் என்பதை அவனது திருக்கழுகுன்றச் சாசனத்தில் அறிய முடிகிறது.

பூநகரிக்கு அண்மையில் அவன் வந்திறங்கிய இடம், இன்றும் வீரபாண்டியன் முனை என்று அழைக்கப்படுவதாக பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை குறிப்பிடுகின்றார். திருகோணமலையில் வீரபாண்டியன் பொறித்த மீன் இலட்சணை அடங்கிய கல்வெட்டு இன்றும் அங்குள்ள பிடறிக் தோட்டை வாயிலில் காணப்படுகின்றது.



கி.பி. 1271-ல் பொலநறுவை அரசன் இரண்டாம் பராக்கிரமபாகு இறந்ததும் அவனது மகன் மூன்றாம் விஜயபாகு ஆட்சிக்கு வந்தான். அவன் ஆட்சிக்கு வந்த இரண்டாவது வருடம், 'மித்ரா' என்ற மந்திரியின் சதியால் அவன் கொல்லப்படவே, அவனது சகோதரன் முதலாம் புவனேகபாகு மித்திராவையும் அவனுக்கு உதவியாக வந்த முன சிங்கா என்பவனது படைகளையும் வென்று, பொலநறுவையைக் கைவிட்டு யாப்பகூவாவுக்குச் சென்று அதைத் தலைநகராக்கி அரசாண்டான்.

புவனேகபாகுவின் காலத்தில் தமிழ்நாட்டில் மாறவர்மன் குலசேகரன் பட்டத்திற்கு வந்தான். இவன் தன்னுடைய பிரதிநிதியாக இருந்து இலங்கையை பரிபாலிப்பதற்காக 'ஆரியச் சர்க்கரவர்த்தி' என்னும் தளபதியை அனுப்பி வைத்ததாகச் சொல்லப்படுகிறது.

மன்னார் கடலில் முத்துக்குளிக்கும் உரிமை சிங்கை நகர் அரசர்களுக்கே உரியதாக இருந்தது. ஆனால் யாப்பகூவா அரசன் புவனேகபாகு அவ் உரிமை தனக்குரியதென்று கூற சிங்கை நகர் அரசனுக்கும் அவனுக்குமிடையில் போர் மூண்டது. இப்போரில் பெருங்கடற்படையுடன் வந்த சிங்கைநகர் அரசன் புவனேகபாகுவை வென்று யாப்பகூவாவை அழித்து, புத்த விகாரைகளையும் நாசமாக்கி, பௌத்த சின்னங்களையும் அபகரித்துச் சென்றதாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது. புவனேகபாகுவை வென்ற 'ஆரியச் சர்க்கரவர்த்தி' பாண்டியனின் தளபதியே என்று யாழ்ப்பாண அரசர்கள் சிங்கள அரசர்களை வெற்றிகொண்டார்கள் என்பதை மறுக்கும் நோக்கில் மகாவம்சம் கூறிய பொய்யுரையை அடியொற்றி யாழ்ப்பாணத்து ஆரியச் சர்க்கரவர்த்திகள் பாண்டிய நாட்டிலிருந்து வந்தவர்கள் என்று 'காட்ட சிலர் முற்படுவதாக முதலியார் இராஜநாயகம் கூறுகிறார்.

உண்மையில் சுந்தரபாண்டியன் குடாநாட்டின் மீது படையெடுத்தபோது சிறைப்பிடிக்கப்பட்டு, அவன் மகன் வீரபாண்டியன் காலத்தில் கொல்லப்பட்டதாக நம்பப்படும் குலசேகர சிங்கை ஆரியனின் மகன் குலோத்துங்க சிங்கையாரியனே மாறவர்மன் குலசேகரன் காலத்தில், அவனது ஆணையை ஏற்று குடாநாட்டிலிருந்து அரசாள அனுமதிக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. புவனேகபாகு மீது படையெடுத்துச் சென்று அவனை வெற்றி கொண்டவன் குலோத்துங்க சிங்கை ஆரியன் என்கிற செகராசசேகரனே என்பது முதலியார் இராஜநாயகத்தின் வாதமாகும்.

உண்மையில் சிங்கைநகர் அரச பரம்பரையினரை கலிங்க மகானோடு சம்மந்தப்படுத்துவதும், பாண்டியப் பரம்பரையுடன் தொடர்பு படுத்திப் பார்ப்பதும் ஒரு வரலாற்று மயக்கமாகும். கலிங்க மகானுக்கு முன் உக்கிர சிங்கன் காலத்தில் சிங்கை நகர் நிறுவப்பட்டிருக்கும் போது சிங்கை நகரின் முதல் அரசன் கூழங்கைச் சக்கரவர்த்தி என்கிற கலிங்க மகான் என்பது அபத்தமாகும். அவ்வாறே குலசேகர பாண்டியனின் தளபதியான ஆரியச் சக்கரவர்த்திதான் சிங்கை நகர் ஆரியச் சக்கரவர்த்திகளின் மூதாதையர் என்று சொல்வது அதை விட அபத்தமானது. இது தொடர்பான விரிவான ஆய்வுகள் தேவை.

எவ்வாறாயினும் முதலாம் புவனேகபாகுவின் ஆட்சிக்காலத்தில் அவன் சிங்கை நகர் அரசனான குலோத்துங்க சிங்கையாரியனுக்கு திறை செலுத்தி வந்தான். கி.பி 1284-ம் ஆண்டில் அவன் இறந்ததும் ஏறத்தாழ 12 வருடங்கள் இலங்கை முழுதும் சிங்கை நகர் (குலோத்துங்கன்) ஆட்சிக்கு கீழ் இருந்தது.

கி.பி 1284-ல் வெனிஸ் நகரத்து பிரயாணியான மார்க்கோ போலோ சீனாவிலிருந்து தனது நாட்டிற்கு கடல் வழிப்பயணம் செய்யும் வழியில் குடாநாட்டிற்குத் துறை முகமொன்றில் இறங்கி குடாநாட்டை சுற்றிப் பார்த்தாக அவனது பிரயாண நூலில் குறிப்பிட்டுள்ளான்.

அக்காலத்து இலங்கை முழுவதும் 'சந்தோமன்' என்னும் வட இலங்கை அரசனுடைய ஆட்சியிலிருந்த தென்றும் அவனது குடிமக்கள் அரிசியும், எள்ளும், மாமிசமும், பாலும் உணவாக உண்டார்கள் என்றும். கள்ளும், வாசனைத்திரவியங்களும் மலிந்து விளங்கி இருந்த தென்றும் வாசனைத்திரவியங்கள் வேறு இடங்களிலிருந்து கொண்டு வரப்பட்டு பிறபிரதேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதென்றும் இக் 'கோளம்' என்னும் துறைமுகத்திற்கே சீனா, அரேபியா முதலான மேலைத் தேசங்களிருந்து வியாபார நோக்கில் பல கப்பல்கள் வந்து போயின என்றும் மார்க்கோ போலோ குறிப்பிட்டுள்ளான்.

மார்க்கோ போலோ குறிப்பிடும் 'கோளம்' என்னும் இடம் ஊர்காவற்துறையையே குறிக்கிறது என்பது முதலியார் இராஜநாயகத்தின் கருத்தும், கோவளம் என்பதன் சிதைவே கோளம் என்பதாகும் என்பது அவரது வாதமாகும். காரை நகரின் வட மேற்கு முனையில் இருக்கும் கோவளமே இந்தக் கோளம் என்பது அவரது அபிப்பிராயம் 'சந்தோமன்' என்னும் பெயர் 'செகராசசேகரனை' அல்லது 'சிங்கை ஆரியன்' என்பதைக் குறிப்பதாகும் என்றும் அவர் கூறுகிறார்.

மீண்டும் குலோத்துங்க சிங்கை ஆரியனுக்குப்பின் அவனது மகன் விக்கிரம சிங்கையாரியன் என்கிற பரராசசேகரன் காலத்தில் கி.பி. 1292 மொன்றிக் கொர்வினோ (MONTIC CORRINO) என்னும் இடத்தைச் சேர்ந்த யோவான் என்னும் கிறித்தவ மதகுரு யாழ்ப்பாணம் கடல் வழியாகப் பிரயாணம் செய்ததாகச் சொல்லப்படுகிறது. அவரது குறிப்பின் படி யாழ்ப்பாணக்கடல் அதிகளவிற்கு போக்குவரத்து [illegible]டி மிகுந்ததென்றும் ஆண்டு சந்த[illegible] தோறும் அங்கே 60-க்கு மேற்பட்ட மரக்கலங்கள் மோதுண்டு கிடக்கு மென்றும் அறியப்படுகிறது.

கி.பி. 1296ல் யாப்பகூவா மன்னன் புவனேகபாகுவின் மகன் மூன்றாம் பராக்கிரமபாகு, பாண்டிய மன்னன் குலசேகர பாண்டியனிடம் சென்று சிங்கை நகர் மன்னன் தனது தந்தையிடம் கைப்பற்றிய தங்களது அரச உரிமையையும், பௌத்த சின்னங்களையும் தமக்குத்திருப்பித் தரும்படி விக்கிரம சிங்கையாரியனுக்கு சொல்ல வேண்டுமென வேண்டினான். அவனது வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட குலசேகரன் சிங்கை நகர் மன்னன் விக்கிரமனுக்கு கட்டளையிட அவனும் யாப்பகூவ அரசுரிமையையும் புத்த தந்தத்தையும் மூன்றாம் பராக்கிரமபாகுவிடம் ஒப்படைத்தான்

விக்கிரம சிங்கையாரியனுக்கு திறை செலுத்தி சிற்றரசாக இருக்க ஒப்புக்கொண்டு ஆட்சியுரிமையைப் பெற்ற மூன்றாம் பராக்கிரமபாகு தனது இராஜதானியை யாப்பகூவாவிலிருந்து குருநாகலுக்கு மாற்றியதோடு தனது படைகளையும் பலப்படுத்திக் கொண்டு தமிழருக்கும் சைவ சமயத்தவர்களுக்கும் எதிரான கலவரத்தை தூண்டிவிட்டான். இந்தக் கலவரத்தில் இரண்டு தமிழர்கள் கொல்லப்பட்டு பலர் காயமடைந்ததைக் கேள்விப்பட்ட விக்கிரம சிங்கையாரியன் படையெடுத்து வந்து தமிழருக்கு எதிரான அந்தக் கலகத்திற்கு தலமை தாங்கிய புஞ்சிபண்டா என்பவனையும் அவனோடு சேர்ந்த 17 பேரையும் தலை வெட்டிக் கொன்றதோடு மற்றையோரை கைது செய்ய தன்னுடைய உயிருக்கு அச்சம் வந்துவிடும் எனப்பயந்த மூன்றாம் பராக்கிரமபாகு விக்கிரம சிங்கையாரியனிடம் தனக்கும் அந்தக்கலவரத்திற்கும் சம்மந்தமில்லையெனச் சொல்லி மன்னிப்புக் கோரினான்.

கி.பி. 1302-ல் விக்கிரம சிங்கையாரியன் இறக்க பட்டத்திற்கு வந்த அவன் மகன் வரோதய சிங்கை ஆரியன் என்ற செகராசசேகரன் தனது தந்தையின் ஆட்சியில் ஏற்பட்ட மத இனக் கலவரத்தை கருத்தில் கொண்டு பௌத்த சிங்களவர்கள் தனது ஆட்சியில் அவ்வாறு நடந்து கொள்ளாத விதத்தில் சில கட்டுப்பாடுகளையும் அவ்வாறு கலவரம் நடைபெறாமல் தடுப்பதற்கான ஏற்பாடுகளையும் அறிந்து பயங்கொண்ட மூனிறாம் பராக்கிரமபாகு தனது இராஜதானியை குருநாகலிருந்து தம்பதெனியாவிற்கு மாற்றிக்கொண்டான்.

- நக்கீரன்

படிப்பகம்